# கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

## நாடு பூராகவும் அமைந்துள்ள தேசிய பாடசாலைகளில் வெற்றிடமாகியுள்ள/ எதிர்வரும் காலங்களில் வெற்றிடமாக உள்ள இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் I அதிபர் பதவி வெற்றிடங்களை நிரப்புதல் - 2025

**இத்துடன் உள்ள உப ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய பாடசாலைகளின் அதிபர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக பொருத்தமான உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்வதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவின் உத்தரவின் படி இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் I ஐச் சேர்ந்த தகுதிபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பப் படிவங்கள் கோரப்படுகின்றன.**

### 01. தகைமைகள்

i. இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் I உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல்.

குறிப்பு 1: விண்ணப்ப இறுதித் திகதிக்கு முன்னர் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் I இற்கு பதவி உயர்வு பெற்றுக் கொள்வதற்கு தகைமைகளைக் கொண்டுள்ள உத்தியோகத்தர்களும் இவ் வெற்றிடங்களுக்காக விண்ணப்பிக்க முடியும் என்பதுடன், உரிய பதவி உயர்வுக்கான தகைமைகளைக் கொண்டிராத உத்தியோகத்தர்களால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். (இருப்பினும் நேர்முகப் பரீட்சையின் போது தரம் 1 இற்கு பதவி உயர்வு பெற்றமைக்குரிய கடிதத்தை கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும்.)

ii. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவினால், தேசிய பாடசாலை அதிபர்களாக நியமனம் பெறுவதற்கு தகுதியற்றவர்கள் என்பதாக அறியத் தரப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் விண்ணப்பிக்க முடியாது

iii. விண்ணப்பதாரர்களது வயது விண்ணப்ப இறுதித் திகதிக்கு 58 வருடங்களைத் தாண்டியிருத்தலாகாது.
(ஏற்கனவே தேசிய பாடசாலையொன்றில் அதிபர் பதவியில் பதில் கடமை செய்யும்/ கடமை நிறைவேற்றும்/ கடமை தழுவல் அடிப்படையில் முறையாக நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் அவ் அதிபர் பதவிக்கே விண்ணப்பிக்கும் போது இந்த வயதெல்லை செல்லுபடியாகாது)

### 02. நிபந்தனைகள்

i. இம்முறை வெற்றிடங்களை நிரப்புப் போது உரிய பதவிக்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் ஆகக் குறைந்தது 3 வருடங்களேனும் சேவையாற்ற வேண்டும். (மூன்று வருடங்களுக்கு முன்னர் ஓய்வு பெறவிருக்கும் உத்தியோகத்தர்களுக்கு இந் நிபந்தனை செல்லுபடியாகாது)

ii. அதிபர் பதவிக்கு நியமனம் பெற்றால், ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய நியாயமான காரணங்கள் எதுவும் இல்லாமல் அப் பதவியில் கடமைகளைப் பொறுப்பேற்பதை நிராகரிக்க முடியாது.

### 03. விண்ணப்பிக்க வேண்டிய முறை

i. விண்ணப்பதாரர்கள் இத்துடன் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய A4 அளவுத் தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை முறையாக பூரணப்படுத்தி, பதிவுத் தபால் மூலமாக மாத்திரம் கீழ்வரும் முகவரிக்கு 2025.10.17 ம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் அனுப்பிவைக்க வேண்டும். விண்ணப்பப் படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"தேசிய பாடசாலை அதிபர் பதவி – இ.க.நி.சே - I"** எனக் குறிப்பிடுதல் வேண்டும். தாமதமாக கிடைக்கப் பெறும் விண்ணப்பப் படிவங்கள் மற்றும்

முழுமையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன், விண்ணப்பப் படிவங்களை "**உதவிச் செயலாளர், கல்விச் சேவைகள் தாபனக் கிளை, கல்வி உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல**" எனும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ii. தங்களது அண்மையில் எடுக்கப்பட்ட $2x2^{1}/_{2}$ அங்குல வர்ணப் புகைப்படம் ஒன்றை விண்ணப்பப் படிவத்தின் வலது பக்க மேல் மூலையில் ஒட்டி அனுப்புதல் வேண்டும்.

iii. அத்துடன் புள்ளி வழங்கல் திட்டத்தின் 2.1, 2.2இன் கீழ் தரப்பட்டுள்ள பாடசாலை முகாமைத்துவம் தொடர்பான சேவை அனுபவத்தை நிரூபிப்பதற்காக நியமனம்/ இடமாற்றக் கடிதங்களை சமர்ப்பிக்கும் போது குறித்த கடிதங்களுடன் விண்ணப்பதாரர் பாடசாலை வகைப்படுத்தலுக்கமைய (1AB,1C,2,3) குறித்த வகைப்படுத்தலுக்குரிய பாடசாலை ஒன்றில் உரிய காலப் பகுதியினுள் சேவையாற்றியதாகவும் உரிய நியமனம்/ இடமாற்றக் கடிதங்களில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின்/ மாகாண சபைகளின் ஆளுநர்களது அதிகாரக் கையளிப்பின் பிரகாரம் உரிய நியமன அதிகாரி கையொப்பமிட்டிருப்பதை மேலதிக செயலாளர் (கல்விச் சேவைகள் தாபனம்)/ மாகாணக் கல்விப் பணிப்பாளரூடாக எழுத்து மூலம் நிரூபிக்கும் கடிதம் ஒன்றை விண்ணப்பப் படிவத்துடனோ அல்லது நேர்முகப் பரீட்சையின் போதோ கட்டாயமாக சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் புள்ளி வழங்கல் திட்டத்தின் 2.3 இன் கீழ் பாடசாலை மேற்பார்வைப் பணிகளை மேற்கொள்ளும் உத்தியோகத்தர் ஒருவராக பாடசாலை மேற்பார்வை சேவை அனுபம் ஆகியவற்றை நிரூபிப்பதற்காக நியமனக் கடிதங்கள்/ இடமாற்றக் கடிதங்களை சமர்ப்பிப்பதாயின் குறித்த உத்தியோகத்தர் பாடசாலை மேற்பார்வை செயற்பாடுகளில் ஈடுபட்டமை தொடர்பில் உரிய மாகாண உத்தியோகத்தர்கள்/ கல்வி அமைச்சின் உரிய பிரிவிற்குப் பொறுப்பான மேலதிக செயலாளருக்கு எழுத்து மூலமாக உறுதிப்படுத்த வேண்டும்.

iv. புள்ளி வழங்கல் திட்டத்தில் தரப்பட்டுள்ள நியதிகளுக்குரியதாக முன்னிலைப்படுத்தப்படும் அனைத்து தகைமைகளும் விண்ணப்ப இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னராக பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அன்றை தினத்தின் பின்னர் பூர்த்தி செய்யப்பட்டுள்ள தகைமைகள் அல்லது சான்றிதழ்களுக்கு புள்ளி வழங்கப்பட மாட்டாது. அத்துடன் நேர்முகப் பரீட்சைத் தினத்தின் பின்னர் முன்னிலைப்படுத்தப்படும் எந்தவொரு கடிதங்களோ சேவைச் சான்றிதழ்களோ ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

## 04. செயன்முறை

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவினால் அனுமதியளிக்கப்பட்ட இத்துடன் தரப்பட்டுள்ள புள்ளி வழங்கல் திட்டத்திற்கமைய, குறித்த குழுவினால் நியமிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையினரால் வழங்கப்படும் புள்ளிகள், விண்ணப்பதாரரின் விருப்பு, சேவையின் தேவை, விண்ணப்பதாரர் தொடர்பில் காணப்பட்ட/ காணப்படும் ஒழுக்காற்று நடவடிக்கைகள், பாடசாலையின் கலாசார பின்னணி/ மரபுகள், கற்றல் மொழி மூலம், பாடசாலை வகை (ஆண்/ பெண்/ கலவன்) மற்றும் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய வேறு விடயங்களையும் கருத்தில் கொண்டு கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் செயலாளரினால் வழங்கப்படும் பரிந்துரையின் அடிப்படையில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவினார் அதிபர் பதவிக்கு நியமிக்கப்படுவார்கள்.

**குறிப்பு 2:** நேர்முகப் பரீட்சையின் போது வெளிக்காட்டும் திறமைக்கமைய எந்தவொரு பாடசாலையும் கிடைக்கப் பெறாத உத்தியோகத்தர்களை வெற்றிடங்கள் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள அதிபர்கள் எவரும் தெரிவு செய்யப்படாத பாடசாலை ஒன்றிற்கு **சேவையின் தேவையின் அடிப்படையில்** நியமனம் செய்வதற்கு நடவடிக்கையெடுக்கப்படும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவின் உத்தரவின் படி,

**நாலக களுவெவ**
செயலாளர்
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

**2025.09.** 25